# குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம்
# திருப்பதிசாரம் - அஞ்சல்

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத்திட்டம்

## பணிகள் பற்றிய வருட அறிக்கை -2017

குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவுக்குட்பட்ட திருப்பதிசாரம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 33 ஆண்டுகளாக பல்வேறு நலப்பணிகளை செய்து வருகிறது. இதில் ஊனமுற்றோர் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் 2017-ம் ஆண்டு செய்து முடித்த பணிகள் பற்றிய விரிவான அறிக்கை சமர்ப்பிக்கபடுகிறது.

**திட்டத்தின் நோக்கம்:**

ஊனமுற்ற பிள்ளைகளின் நலனில் அக்கரை கொண்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கை பாதிப்படைவதை தடுக்கவும், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி அவர்களும் சமுதாய மக்களுடன் இணைந்து வாழ்வதற்கு வழிவகை செய்யும் நோக்கத்தோடு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**1. மேற்கொண்ட திட்டங்கள்:**

1. **மனவளர்ச்சி குன்றிய மாணவிகளுக்கான தங்கும் வசதியுடன் கூடிய சிறப்பு பயிற்சி மையம் –** திருப்பதிசாரம்.
2. **ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆப் கன்னியாகுமரி –** புளியடி, நாகர்கோவில்.

   (மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய சிறப்பு பயிற்சி மையம்)
3. **நல்ல சமாரியன் முதியோர் இல்லம் (பெண்கள்)** - ஆசாரிபள்ளம்
4. **அன்பகம் மனநோயாளிகள் இல்லம் (பெண்கள்) –** ஜேம்ஸ் நகர், முட்டம்
5. முடநீக்கு மற்றும் உபகரணங்கள் வழங்கும் திட்டம்.
6. வளமேம்பாட்டுத்திட்டம்.

ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொண்ட பணிகள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

## 2. மேற்கொண்ட பணிகள்:

1. ஊனமுற்றோர், ஊனமுற்றவர்களின் பெற்றோர்களை சந்தித்தல்.
2. ஊனமுற்றோர் புள்ளி விபரம் சேகரித்தல்.
3. பெற்றோர் சங்க கூட்டம் நடத்துதல்.
4. சிறப்பு பயிற்சி கொடுத்தல்
5. பணியாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
6. பணிமதிப்பீடு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
7. விழாக்கள் கொண்டாடுதல்
8. தொழிற் பயிற்சி கொடுத்தல்
9. நன்கொடை வசூலித்தல்
10. ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்துதல்
11. பிள்ளைகளை சுற்றுலா அழைத்துச் செல்லுதல்
12. பிறதுறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
13. கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்
14. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்
15. மருத்துவ முகாம் நடத்துதல்
16. ஊனமுற்றோருக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல்.
17. பிற நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க, பயிற்சி பெற செல்லுதல்

## 3. திட்டப்பணிகள் யார் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், ஒருங்கிணைப்பாளர்கள், உதவி பணியாளர்கள், விடுதி பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது.

## 4. செய்து முடித்த பணிகள்:

**1. ஊனமுற்றோர் மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளின் பெற்றோர்களை சந்தித்தல்.**

உடல் ஊனமுற்ற பிள்ளைகளையும், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளையும் வீடுகளில் சென்று சந்தித்து பேசி அவர்களின் குடும்ப சூழ்நிலையை அறிந்து அதற்கு ஏற்றபடி சிறப்பு பயிற்சி கொடுக்கவும், வீட்டில் தனியாக இருப்பதை தவிர்த்து சிறப்பு பயிற்சி மையத்திற்கு அனுப்புவதின் அவசியம் பற்றியும், வீட்டில் பிள்ளைகளை தனியாக வைத்து பராமரிக்கும் போது ஏற்படும் சிரமங்களை தவிர்க்கவும் வேண்டி பிள்ளைகளையும், பெற்றோர்களையும் வீடு வீடாகச்சென்று சந்தித்து பேசப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

இந்த ஆண்டு நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட 312 பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்து பேசப்பட்டுள்ளது.

தோவாளை வட்டாரத்திற்குட்பட்ட 116 பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்து பேசப்பட்டுள்ளது.

பிற பணியாளர்கள் மூலம் 141 பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்துப் பேசப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியிடம் | சந்தித்த ஊனமுற்றவர்கள் | சந்தித்த பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1 | நாகர்கோவில் நகராட்சி பகுதி | 312 | 312 |
| 2 | தோவாளை வட்டாரம் மற்றும் பிற பகுதிகள் | 116 | 116 |
| 3 | பணியாளர்கள் மூலம் சந்திக்கப்பட்டவர்கள் | 141 | 141 |
| **மொத்தம்** | | **569** | **569** |

**2. பெற்றோர் சங்க கூட்டம் நடத்துதல்:**

மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் நடத்தை குறைபாடுகளை அறிந்து அவர்களுக்கு தேவையான சிறப்புப் பயிற்சிகளை திட்டமிடவும், சிறப்புப் பள்ளியில் கொடுக்கப்படும் சிறப்பு பயிற்சிகளை பிள்ளைகள் வீட்டிற்கு செல்லும்போது வீட்டிலும் செய்ய வைக்கவும், பெற்றோர்களின் ஆலோசனைகளை கேட்கவும் வேண்டி பெற்றோர் சங்கக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளியில் இந்த ஆண்டு 2 பெற்றோர் சங்க கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் 42 பெற்றோர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

"ஸ்பாஸ்டி" தொழிற்பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு 2 பெற்றோர் சங்க கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் 44 பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.



Scanned with CamScanner

| வ. எண் | சிறப்பு பள்ளியின் பெயர் | நடைபெற்ற பெற்றோர் சங்க கூட்டங்கள் | கலந்து கொண்ட பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1. | "ஸ்பாஸ்டி" - புளியடி | 2 | 44 |
| 2. | மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி - திருப்பதிசாரம் | 2 | 42 |
| | மொத்தம் | 4 | 86 |

3. **சிறப்பு பயிற்சிகள் கொடுத்தல், பராமரிப்பு கொடுத்தல்:**

மனவளர்ச்சி குன்றிய மாணவ, மாணவிகளின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுவதை தடுக்கவும், தன்னுடைய தேவைகளை தானே பூர்த்தி செய்து கொள்ளவும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு குழு பயிற்சி, நடை பயிற்சி, விளையாட்டு பயிற்சிகள் மற்றும் சுய பராமரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 56 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

திருப்பதிசாரம் சிறப்பு பள்ளி மாணவிகளுக்கு விளையாட்டு பயிற்சி, நடை பயிற்சி, நடன பயிற்சி மற்றும் சுய பராமரிப்பு பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 48 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற, கவனிப்பு தேவைப்படும் முதியோர்களை (பெண்கள்) தங்க வைத்து அவர்களுக்கு தேவையான அனைத்து பராமரிப்பு பணிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 25 முதியோர்கள் பயனடைந்துள்ளனர்.

குமரி மாவட்டம், முட்டம் பகுதியில் அமைந்துள்ள ஜேம்ஸ் நகரில் இவ்வருடம் 27-08-2017 அன்று புதியதாக **அன்பகம் மனநோயாளிகள் (பெண்கள்) இல்லம்** தொடங்கப்பட்டு அதில் ஆதரவற்ற பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் மனநோயாளிகள் தங்க வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இதில் 28 பெண்கள் பயனடைந்துள்ளனர்.



Scanned with CamScanner

| வ. எண் | சிறப்புப் பள்ளியின் பெயர் | சிறப்பு பயிற்சி பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | "ஸ்பாஸ்டி" தொழிற்பயிற்சி மையம் – புளியடி | 56 |
| 2. | மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பள்ளி திருப்பதிசாரம் | 48 |
| 3. | ஆன்பகம் மனநோயாளிகள் இல்லம், ஜேம்ஸ் நகர் - முட்டம் | 28 |
| 4. | நல்ல சமாரியன் முதியோர்(பெண்கள்) இல்லம், ஆசாரிபள்ளம் | 25 |
| மொத்தம் | | 157 |

4. **பணியாளர்கள் கூட்டம் நடத்துதல்:**

ஒவ்வொரு திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களும் தங்களுடைய பணிகளை திட்டமிட்டு செய்வதற்கும் செய்த பணிகளை ஆராய்ந்து பணியில் உள்ள நிறை,குறைகளை அறிந்து குறைகளை நிவர்த்தி செய்து பணிகளை சிறப்பாக செய்ய வேண்டி மாதம்தோறும் பணியாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மையத்தில் 8 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி திருப்பதிசாரத்தில் 11 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லம் ஆசாரிபள்ளத்தில் இந்த ஆண்டு 8 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

'அன்பகம்' மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகர் முட்டத்தில் 2 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

'கார்டு' நிர்வாக பணியாளர்களுக்கு 15 பணியாளர் கூட்டம் நடைபெற்றுள்ளது.



Scanned with CamScanner

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நடைபெற்ற பணியாளர் கூட்டம் |
|---|---|---|
| 1 | "ஸ்பாஸ்டி"- புளியடி | 8 |
| 2 | மனவளர்ச்சிகுன்றியோர் சிறப்பு பள்ளி –திருப்பதிசாரம். | 11 |
| 3 | நிர்வாக பணியாளர் கூட்டம் | 15 |
| 4. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம், ஆசாரிபள்ளம் | 8 |
| 5. | அன்பகம் மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகர், முட்டம் | 2 |
| | மொத்தம் | 44 |

**5. பணி மதிப்பீடு நடத்துதல்:**

ஒவ்வொரு மாதமும் திட்டமிட்ட பணிகளை ஒவ்வொரு திட்டத்தின் கீழும் எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதைப்பற்றி ஆய்வு செய்யவும் திட்டமிட்ட பணிகளில் செய்து முடிக்காத பணிகளை எவ்வாறு செய்வது என்பதை பற்றி கலந்து ஆலோசிக்கவும் ஒவ்வொரு மாதமும் பணி மதிப்பீடு நடத்தப்பட்டது.

**"ஸ்பாஸ்டி" தொழிற் பயிற்சி மையம்,** புளியடியில் 8 பணிமதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது.

**மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி –** திருப்பதிசாரத்தில் 11 பணிமதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது.

**நல்ல சமாரியன் முதியோர் இல்லம்** - ஆசாரிபள்ளத்தில் 8 பணி மதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது.

**'அன்பகம்' மனநோயாளிகள் இல்லம்** - ஜேம்ஸ் நகரில் 2 பணிமதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது.

நிர்வாக பணியாளர்களுக்கு 15 பணிமதிப்பீடு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

| வ.எண் | திட்டத்தின் பெயர் | நடைபெற்றபணி மதிப்பீடு கூட்டம் |
|---|---|---|
| 1. | "ஸ்பாஸ்டி" தொழிற்பயிற்சி மையம் - புளியடி. | 8 |
| 2. | மனவளர்ச்சிகுன்றியோர் சிறப்பு பள்ளி – திருப்பதிசாரம். | 11 |
| 3. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம், ஆசாரிபள்ளம். | 8 |
| 4. | அன்பகம் மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகர், முட்டம் | 2 |
| 5. | நிர்வாக பணியாளர்கள் பணி மதிப்பீடு கூட்டம். | 15 |
| | மொத்தம் | 44 |

**6. விழாக்கள் கொண்டாடுதல்:**

மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் திறன்களையும், திறமைகளையும் வெளிக்கொணரவும் பல்வேறு விழாக்களின் வித்தியாசம் காணவும் விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கொண்டாடப்பட்ட விழாக்கள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**1. மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி திருப்பதிசாரம்:**

14-01-2017 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

26-01-2017 அன்று குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக திரு. கணேஷ் ராஜ்குமார் SBT வங்கி திருப்பதிசாரம் கிளையின் மேலாளர் அவர்கள் கலந்து கொண்டு தேசிய கொடியேற்றி வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

01-04-2017 அன்று சிறப்பு பள்ளி ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

15-08-2017 அன்று சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக திரு. கண்ணன் - VAO (Rtd) அவர்கள் கலந்து கொண்டு தேசிய கொடியேற்றி வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

28-09-2017 அன்று விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது.



Scanned with CamScanner

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14-01-2017 | பொங்கல் விழா. |
| 2. | 26-01-2017 | குடியரசு தின விழா. |
| 3. | 01-04-2017 | சிறப்பு பள்ளி ஆண்டுவிழா. |
| 4. | 15-08-2017 | சுதந்திர தின விழா. |
| 5. | 28-09-2017 | விளையாட்டு விழா. |

2. **ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆ்.ப் கன்னியாகுமரி -புளியடி**

26-01-2017 அன்று குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக புளியடி அரசு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி. கில்டா அவர்கள் கலந்து கொண்டு தேசிய கொடியேற்றி வைத்து வாழ்த்துரை, இனிப்பு வழங்கி சிறப்பித்தார்கள்.

29-04-2017 அன்று தொழிற்பயிற்சி மைய ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக திரு. செல்வராஜ் - தொழில் அதிபர் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியும், பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கியும் சிறப்பித்தார்கள்.

15-08-2017 அன்று சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

28-09-2017 அன்று விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது.

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 26-01-2017 | குடியரசு தின விழா. |
| 2. | 29-04-2017 | சிறப்பு பள்ளி ஆண்டு விழா. |
| 3. | 15-08-2017 | சுதந்திர தின விழா. |
| 4. | 28-09-2017 | விளையாட்டு விழா. |

3. **நல்ல சமாரியன் முதியோர் இல்லம்- ஆசாரிபள்ளம்.**

14-01-2017 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

01-10-2017 முதியோர் தினவிழா கொண்டாடப்பட்டது.



Scanned with CamScanner

10-11-2017 அன்று முதியோர் இல்ல ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக Fr. குருசு கார்மல், Sr. செல்வி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

25.12.2017 அன்று கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது.

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14-01-2017 | பொங்கல் விழா. |
| 2. | 01-10-2017 | முதியோர் தின விழா. |
| 3. | 10-11-2017 | முதியோர் இல்ல ஆண்டு விழா. |
| 4. | 25-12-2017 | கிறிஸ்மஸ் விழா. |

**7. தொழில் பயிற்சி கொடுத்தல்:**

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வாழ்க்கைதரத்தை மேம்படுத்தவும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் சிறுசிறு தொழில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

"ஸ்பாஸ்டி" தொழிற்பயிற்சி மைய மாணவர்களுக்கு தோட்டம் பராமரித்தல், ஆடு, கோழி பராமரித்தல், பேப்பர் கவர் ஒட்டுதல் போன்ற பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி மாணவிகளுக்கு ஆடு, கோழி பராமரிக்கவும், வாரியல் தயார் செய்யவும், பூமாலை செய்யவும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

**8. நன்கொடை வசூலித்தல்:**

நமது சிறப்பு இல்லங்களில் தங்கி பராமரிப்பு, சிறப்பு பயிற்சி, பெற்று வரும் நபர்களுக்கு தேவையான உணவு, உடை, மருத்துவ வசதிகள் அனைத்தும் உள்ளுர் நன்கொடையாளர்களிடமிருந்து பணமாகவும், பொருளாகவும் வாங்கி நடத்தப்பட்டு வருகிறது.



Scanned with CamScanner

இந்த ஆண்டு நன்கொடை பெற்றதன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திருப்பதிசாரம் சிறப்பு பள்ளிக்கு இந்த ஆண்டு ஒரு நேர உணவாக 1000 நபர்களும், ஒருநாள் உணவாக 58 நபர்களும் உதவி செய்துள்ளார்கள். ரூ. 1,98,910/- நன்கொடையாக கிடைத்துள்ளது.

"ஸ்பாஸ்டி" தொழிற் பயிற்சி மையத்திற்கு இந்த ஆண்டு ஒரு நேர உணவாக 351 நபர்களும், ஒரு நாள் உணவாக 22 நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். ரூபாய் 1,90,450 நன்கொடையாக கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்திற்கு ஒருநேர உணவாக 89 நபர்களும், ஒருநாள் உணவாக 2 நபர்களும் உதவி செய்துள்ளார்கள். ரூபாய் 7200/- நன்கொடையாக கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

அன்பகம் மனநோயாளிகள் இல்லத்திற்கு ஒரு நேர உணவாக 6 நபர்களும், ஒருநாள் உணவாக 1 நபரும், ஒரு நேர தேனீர், தின்பண்டம் 7 நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். நன்கொடையாக ரூ.11700/- கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒருநேர உணவாக வழங்கியவர்கள் | 1 நாள் உணவாக வழங்கியவர்கள் | நன்கொடை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி – திருப்பதிசாரம் | 1000 | 58 | 1,98,910/- |
| 2. | 'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மையம் - புளியடி. | 351 | 22 | 1,90,450/- |
| 3. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம் | 89 | 2 | 7200/- |
| 4. | அன்பகம் மனநோயாளிகள் இல்லம் - ஜேம்ஸ் நகர், முட்டம் | 6 | 1 | 11700/- |



Scanned with CamScanner

**பொருளாக உதவி செய்தவர்கள்:-**

**மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளிக்கு பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்.:**

இந்த ஆண்டு திருப்பதிசாரம் சிறப்பு பள்ளிக்கு **Samundra Nylons** நிறுவனம் சார்பாக 5-Litre Grinder-ம்,

**TNEB** (தோவாளை) எஞ்சினியர் சங்கம் வாயிலாக ஆம்பிளிபயரும், மகேந்திரகிரி **ISRO** பணியாளர்கள் சார்பில் Cooker-1, Plastic Bucket, Plate & Cup, Bedsheet, Nighty ஆகியவையும், திருமதி. மைதிலி சுந்தரம் (நாகர்கோவில்) அவர்கள் பயன்படுத்திய Dining Table, Chair, Sofa, Wheel Chair, TV ஆகியவையும், திரு. அபினேஷ் (மாதவலாயம்) அவர்கள் Refregerator-ம், இராமன்புதூரை சார்ந்த திரு. ஆன்றணி அலெக்ஸ் அவர்கள் 200 லிட்டர் தண்ணீர் டேங்க் ஒன்றும், இராஜாக்கமங்கலம் **அன்னை தெரசா அறக்கட்டளை** சார்பில் பக்கெட், பிறஸ், மளிகை, துணிகள் ஆகியவை கொடுத்து உதவி செய்துள்ளார்கள். **M/S. குமரன் ஆட்டோ மொபைல்ஸ்** (கோணம்) சார்பில் 110 சில்வர் கப் கொடுத்துள்ளார்கள். திருப்பதிசாரம் **Federal Bank** வாயிலாக செயர் கொடுத்துள்ளார்கள். கோட்டாறு **ரயில்வே பணியாளர்கள் சங்கம்** சார்பில் சமையல் பாத்திரங்களும், தோவாளையை சார்ந்த திரு. நீலகண்டன் அவர்கள் சமையல் பாத்திரங்களும், **திரு. Arows Sports Welfare Association** (வெட்டூர்ணிமடம்) சார்பில் Plastic Bucket, Gas Stove, Tube Light Set, Pillow, வாளி கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

மேலும் பலர் அரிசி, மளிகை, காய்கறி, உணவு, தின்பண்டங்கள், துணிகள், பெட்சீட், தலையணை, சோப்பு, பிறஸ், பேஸ்ட், சர்ப், டெட்டால், லோசன், டாய்லெட் கிளீனர் ஆகியவைகள் கொடுத்து உதவிசெய்துள்ளார்கள்.

**'ஸ்பாஸ்டி' தொழிற் பயிற்சி மையத்திற்கு பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்:**

அருகுவிளையை சார்ந்த திரு. வெனிஸ்லாஸ் அவர்கள் 10 பிளாஸ்டிக் செயர் கொடுத்துள்ளார்கள். கிறிஸ்டோபர் நகரை சார்ந்த திரு. டிலைட்சிங் அவர்கள் 40 பிளாஸ்டிக் செயர், 3 அலுமினிய வாளி, 12 பிளாஸ்டிக் பந்து



Scanned with CamScanner

வாங்கி கொடுத்து உதவி செய்துள்ளார்கள். ஆரல்வாய்மொழியை சார்ந்த திரு. ராபின்சன் என்பவர் 3 டேபிள் மேட் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்டம் கன்னன்குளத்தை சார்ந்த **கானான் லுத்தரன் சர்ச்** சார்பில் அலுமினிய வாளி-3, பிளாஸ்டிக் வாளி-6, மக்-12, பாய்-19, பெட்சீட்-19, தலையனை -19 ஆகிய பொருட்கள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். இறச்சகுளத்தைச் சார்ந்த J.P. தாஸ் - ஒரு சில்வர் குத்து போணியும், இராமன்புதூரைச் சேர்ந்த திருமதி.ராணி ராமச்சந்திரன் அவர்கள் இட்லி குட்டுவம் -1, வாளி -2, கரண்டி -2-ம், நாகர்கோவில் நாகராஜா கோயில் நிாவாகி 36 சிலவர் தட்டு, 36 கப், 36 சாசரும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். மேலும் இராமன்புதூர் அன்னை தெரசா சமூக நல இயக்கம் சார்பில் ஒரு வீல் செயர் தந்து உதவி செய்துள்ளார்கள்.

**நல்ல சமாரியன் முதியோர் இல்லத்திற்கு பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்.:**

சாந்தபுரத்தை சேர்ந்த திரு. வின்ஸ்டன் அவர்கள் வீல் செயர் ஒன்று வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

கேசரி தெருவை சேர்ந்த திருமதி. பெனடிக்ட் ஜெசிந்தா அவர்கள் கட்டில் ஒன்று வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

Fr. குருசுகார்மல் அவர்கள் வழியாக 2 Table Mat வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

நேசமணிநகரை சேர்ந்த திரு. ஜெயகரன் அவர்கள் Tube Light-5, பல்பு -10, அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகிய பொருட்கள் வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

மேலபெருவிளை **APJ நற்பணி மன்ற** இளைஞர்கள் சார்பில் செயர்கள் வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

பள்ள விளையை சேர்ந்த திருமதி. குளோரி அவர்கள் கேரம்போர்டு-1 பந்து-1 வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

ஆசாரிபள்ளம் **லிற்றில் கிங்டம்** பள்ளி மாணவ, மாணவியர்கள் நைட்டி, பிளாஸ்டிக் கப், டவ்வல், சோப்பு, சலவைதூள், சீப்பு, பவுடர், அரிசி, Paste ஆகியவை வாங்கி தந்து உதவி செய்தார்கள்.



Scanned with CamScanner

அழகப்பபுரத்தை சேர்ந்த திரு. நியூட்டன் அவர்கள் Water Heater-1 வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

ஆசாரிபள்ளம் நண்பர்கள் சங்கம் சார்பில் இரண்டு கட்டில் வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

## 9. ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்துதல்:

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் பணிபுரியும் திட்ட ஒருங்கிணைப்பாளர் களுக்கும் ஒவ்வொரு மாதமும் தங்கள் திட்டத்தின் கீழ் என்னென்ன பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதை பற்றி மதிப்பீடு செய்யவும், அடுத்த மாதம் செய்ய வேண்டிய பணிகளை திட்டமிடவும், பணியில் ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் வேண்டி மாதம் தோறும் முதல் சனிக்கிழமைகளில் ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 11 ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடைபெற்றுள்ளது.

## 10. பிள்ளைகளை சுற்றுலா அழைத்து செல்லுதல்:

### 1. மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி- திருப்பதிசாரம்:

08-09-17 அன்று மனவளர்ச்சிகுன்றியோர் சிறப்பு பள்ளி - திருப்பதிசாரம் மாணவிகளை இராஜாக்கமங்கலம் துறை, முட்டம் ஆகிய இடங்களுக்கு சுற்றுலா அழைத்து செல்லப்பட்டது.

### 2. ஸ்பாஸ்டி சென்டர் ஆ.்.ப் கன்னியாகுமரி:

08-09-17 அன்று ஸ்பாஸ்டி சென்டர் ஆ.்.ப் கன்னியாகுமரி தொழிற்பயிற்சி மையம், புளியடி மாணவர்களை இராஜாக்கமங்கலம் துறை, முட்டம் ஆகிய இடங்களுக்கு சுற்றுலா அழைத்து செல்லப்பட்டது.

## 11. பிறதுறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

13-01-2017 அன்று சுங்கான்கடை "மலர்" அலுவலகத்தில் வைத்து பணமதிப்பு இழப்பு பற்றி நடைபெற்ற கருத்தரங்கு கூட்டத்தில் கலந்து கொள்ளப்பட்டது.



Scanned with CamScanner

**12. கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்:**

"கார்டு" நிறுவனத்தின் கீழ் செயல்பட்டுவரும் கிளை இல்லங்களை மாதந்தோறும் பார்வையிடப்பட்டு பணிகளை முழுமையாக செய்ய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

**13. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்:**

புதிய பணியாளர்கள் வரும் போது அவர்களுக்கு நமது இல்லங்களில் தங்கியிருக்கும் நபர்களை பராமரிப்பது எப்படி என்பது பற்றியும், நமது நிறுவனத்தின் நோக்கம் பற்றியும் பயிற்சிகள் அவ்வப்போது கொடுக்கபட்டுள்ளது.

**14. மருத்துவமுகாம் நடத்துதல்:**

02-12-2017 அன்று திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி மாணவிகளுக்கு பொது மருத்துவமுகாம் நடத்தப்பட்டது. இதில் ஒவ்வொரு பிள்ளைகளையும் பரிசோதனை செய்து தேவையானவர்களுக்கு மாத்திரைகள் கொடுக்கப்பட்டது. அனைத்து மாணவிகளுக்கும் நில வேம்பு கசாயம் கொடுக்கப்பட்டது.

**15. ஊனமுற்றோருக்கு தேவையான உபகரணங்கள் கொடுத்தல்:**

திரு. நாராயணபெருமாள் என்பவருக்கு வீல் செயர் கொடுக்கப்பட்டுள்ளது.

**16. விடுதியில் தங்கியிருக்கும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்:**

மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளிக்கு இந்த ஆண்டு செல்வி. சுஜாதா, செல்வி. ஜெயலெட்சுமி, செல்வி. ரோகினி, செல்வி. சாந்தி, செல்வி. ராஜகுமாரி, செல்வி. K. கவிதா, செல்வி. கவிதா, செல்வி. ரெஜினா, செல்வி. வீரலெட்சுமி, செல்வி. சித்ரா ஆகிய 10 மாணவிகளை புதியதாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஸ்பாஸ்டி சென்டர் ஆ்.்.ப் கன்னியாகுமரி தொழிற்பயிற்சி மையத்திற்கு செல்வன். போபி சுபக், செல்வன். வினோ, செல்வன். இசக்கிராஜா,



Scanned with CamScanner

செல்வன். பாண்டி, செல்வன். முருகானந்தம், செல்வன். வெனிஷ், செல்வன். சுரேஷ், செல்வன். தர்வேஸ் ஆகிய 8 மாணவர்கள் புதியதாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

நல்லசமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளத்தில் திருமதி. பாப்பு அம்மா, திருமதி. தயா, திருமதி. தாய், திருமதி. வசந்தா, திருமதி. ஜமுனா பாய், திருமதி. நூர்ஜகான், திருமதி. நீலாவதி ஆகிய 7 முதியோர்கள் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

**17. நமது சிறப்பு இல்லங்களை இந்த ஆண்டு பார்வையிட வந்த குழுக்களில் சிலவற்றை கீழே குறிப்பிடப்படுகிறது.**

**1. மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி- திருப்பதிசாரம்:**

02-04-2017 அன்று RC சர்ச் மணலிக்கரை **St. ஜோசப் யூத் மூவ்மெண்ட்** மாணவர்கள் பார்வையிட வந்துள்ளார்கள்.

06-04-2017 அன்று குருசடி RC சர்ச் **ஞானப்பூ அன்பியம்** சார்பில் பார்வையிட வந்துள்ளார்கள்.

26-04-2017 St. ஆன்றனி சர்ச் அன்பிய உறுப்பினர்களும்,

26-05-2017 அன்று தேவசகாயம் மவுண்டு, ஆரல்வாய்மொழி செபஸ்தியார் அன்பிய உறுப்பினர்களும்,.

15-07-2017 அன்று **KNSK கல்லூரி மாணவ மாணவிகளும்,**

15-08-2017 அன்று **St. Xavier College, NSS** மாணவ மாணவிகளும்,

29-08-2017 அன்று **ST Hindu College, MSW மாணவ, மாணவிகளும்,**

24-09-2017 அன்று அன்னை நகர் **கோட்டார் மறைமாவட்டம் வின்செட் தே பால் சபை** உறுப்பினர்களும்,

16-10-2017 அன்று நாகர்கோவில் அசிசி ஆலய 7-வது அன்பிய மக்களும்,

12-11-2017 அன்று அரசு மருத்துவ கல்லூரி ஆசாரிபள்ளம் மாணவ, மாணவிகளும்,



Scanned with CamScanner

13-11-2017 அன்று இடலாக்குடி, அன்னை தெரசா அன்பிய இடலாக்குடி மக்களும்,

16-12-2017 அன்று **கோட்டாறு ஆயூர் வேதா மருத்துவ கல்லூரி மாணவ, மாணவிகளும், நாகர்கோவில் ஹோலிகிராஸ் கல்லூரி மாணவிகளும்** பார்வையிட வந்துள்ளார்கள்.

**2. ஸ்பாஸ்டி சென்டர் ஆ்ஃப் கன்னியாகுமரி:**

13-01-2017 அன்று வழுக்கம்பாறை **புனித தெரசாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி** மாணவ மாணவிகள் மற்றம் ஆசிரியர்களும்,

02-04-2017 அன்று மணலிக்கரை **St. ஜோசப் யூத் மூவ்மெண்ட் உறுப்பினர்களும்,**

06-04-2017 அன்று கோடி முனை அன்பிய ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்களும்,

28-04-2017 அன்று **S.R.K. Collage of Nursing-** குலசேகரம் மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்களும் பார்வையிட வந்துள்ளார்கள்.

24-09-2017 அன்று கீழ மணக்குடி புனித வின்செண்ட் தே பவுல் சபை உறுப்பினர்களும், 24-12-2017 அன்று புதுகுடியிருப்பு St. Roch Church பங்குதந்தை மற்றம் இறைமக்களும் பார்வையிட வந்துள்ளார்கள்.

**3. நல்லசமாரியன் முதியோர் இல்லம்:**

16-12-2017 அன்று **கோட்டாறு ஆயூர்வேத மருத்துவ கல்லூரி மாணவ மாணவியர்களும்,** 19-12-2017 அன்று தொலையாவட்டம் அன்னை வேளாங்கன்னி கல்லூரி மாணவ மாணவியர்களும் முதியோர்களை பார்வையிட வந்துள்ளார்கள்.

30-11-2017 அன்று இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட ஓகி புயலினால் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி திருப்பதிசாரம் (பெண்கள்) மற்றும் ஸ்பாஸ்டிக் சிறப்பு பள்ளி புளியடி (ஆண்கள்) ஆகிய இடங்களில் உள்ள இல்லங்களில் புயல்காற்றினாலும், பெருவெள்ளத்தாலும் அதிகமான பாதிப்புகள் ஏற்பட்டு பொருட்கள் சேதமும் கட்டிடங்களின் மேல்



Scanned with CamScanner

கூரை முழுவதுமாக சேதமும், ஆடுகள், கோழிகள் அதிகமாக தண்ணீரில் மூழ்கி இறந்தும் பாதிப்படைந்தது. அன்றைய தினம் பிள்ளைகளை தங்க வைக்க சிரமப்பட்டபோது திரு. காந்தன் (நாக்கால்மடம்) அவர்கள் பிள்ளைகளை தங்க வைக்க இடம் தந்து உதவி செய்தார்கள். அதன் பின்னர் வெள்ளமடம் அரசு உயர்நிலைப்பள்ளியில் தங்க இடம் தந்து உதவி செய்தார்கள். பிள்ளைகளுக்கு தேவையான உணவு, உடைகளை சில தனிநபர்களும், **மக்கள்பாதை** அமைப்பும் செய்து கொடுத்தனர். செண்பகராமன்புதூர் அரசு ஆரம்ப சுகாதார மருத்ததுவமனை மருத்துவ குழுவினர் தேவையான மருத்துவ உதவிகள் செய்து தந்து உதவி செய்தார்கள்.

## 5. செய்து முடிக்காத பணிகள்:

### 1. ஊனமுற்றோர் புள்ளிவிபரம் சேகரித்தல்:

இந்த ஆண்டு தேவைப்படாததால் ஊனமுற்றோர் புள்ளி விபரம் சேகரிக்கப்படவில்லை.

## 6. திட்ட பணிகளை செய்து முடிக்க உதவியாக இருந்தவர்கள்:

திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், ஒருங்கிணைப்பாளர்கள், சிறப்புக்கல்வி ஆசிரியர்கள், முடநீக்கு பணியாளர்கள், உதவியாளர்கள், விடுதி பணியாளர்கள், நிர்வாக பணியாளர்கள் ஆகியோர்கள் உதவியாக இருந்தார்கள்.

## 7. எதிர்கால திட்டங்கள்:

1. ஊனமுற்றோர், ஊனமுற்றவர்களின் பெற்றோர்களை சந்தித்தல்.
2. பெற்றோர் சங்க கூட்டம் நடத்துதல்.
3. சிறப்பு பயிற்சி கொடுத்தல்
4. பணியாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
5. பணிமதிப்பீடு கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
6. விழாக்கள் கொண்டாடுதல்
7. தொழில் பயிற்சி கொடுத்தல்



Scanned with CamScanner

8. நன்கொடை வசூலித்தல்
9. ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்துதல்
10. பிள்ளைகளை சுற்றுலா அழைத்துச் செல்லுதல்
11. பிறதுறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
12. கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்
13. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்
14. மருத்துவ முகாம் நடத்துதல்
15. ஊனமுற்றோருக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல்.
16. பிற நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க, பயிற்சி பெற செல்லுதல்.
17. விடுதி பிள்ளைகள் மற்றும் முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் நபர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

திருப்பதிசாரம்,
07-02-2018.

R. Victoria
திட்ட அலுவலர்.
MISS. R. VICTORIA
PROJECT OFFICER
KARD
THIRUPATHISARAM P.O.
K.K.DIST.

திட்ட இயக்குனர்.
Dr. S. Basil Rajan, M.A.Ph.D.,
PROJECT DIRECTOR,
KARD
THIRUPATHISARAM & P.O.,-629001.
KANYAKUMARI DISTRICT.



Scanned with CamScanner